www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

12 R

Register No. 

# அரையாண்டுத் தேர்வு – 2024

## தமிழ்

நேரம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 90

### பகுதி - I

I. அனைத்து வினாக்களுக்கும் குறியீட்டுடன் விடையளிக்கவும். 14 x 1 = 14

1. "மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது தன்னேர் இலாத தமிழ்! - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயம் அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை இ) அடிஎதுகை, சீர்மோனை ஈ) சீர்எதுகை, அடிமோனை.
2. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்
3. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் சாகித்ய அகாதெமி விருது பெற்ற நூல் .............
அ) ஒரு கிராமத்து நதி ஆ) ஒளிப்பறவை இ) சூரிய நிழல் ஈ) சர்ப்பயாகம்
4. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது
அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்
5. "காவினெம் கலனே: சுருக்கினெம் கலப்பை" - இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்
அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி
6. 'விளியறி ஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது? அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி
7. "மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது" - இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது?
அ) மெய்ப்படிமம் அ) வினைப்படிமம் இ) உருப்படிமம் ஈ) பயன்படிமம்ஷ
8. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல் ... **தொடர்களில் வெளிப்படும் செய்திகள்**
1) மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள் 2) ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்
அ) 1 சரி 2 தவறு ஆ) 1 தவறு 2 சரி இ) 1 தவறு 2 தவறு ஈ) 1 சரி 2 சரி
9. அல்லல் படுப்பதூம் இல் - எவரோடு பழகினால்?
அ) வாள்போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர் இ) எண்ணியாங்கு எய்துபவர் ஈ) தீயினத்தார்
10. 'சாபவிமோசனம்' 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்
அ) கு.அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன் இ) ஜெயமோகன் ஈ) எஸ்.இராமகிருஷ்ணன்
11. 'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்'- விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்
அ) சோழன் நெடுங்கிள்ளியை , பாணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்
இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர் ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்
12. சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிபபாக உணர்த்தும் குறியீடுகள்
அ) உவமை ஆ) உவமேயம் இ) உத்தி ஈ) உள்ளுறை உவமை
13. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக
அ) தனித்தமிழ்த் தந்தை - 1, மு.வரதராசனார்
ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் - 2, மயிலை சீனி.வேங்கடசாமி
இ) தமிழ்த்தென்றல் - 3, திரு.வி.க.
ஈ) மொழி ஞாயிறு - 4, தேவநேயப் பாவாணர்
14. தமிழுக்குத் தலை கொடுத்த 'வள்ளல்' என்று போற்றப்படுபவர்
அ) இளங்குமணன் ஆ) கமணன் இ) நல்லியக்கோடன் ஈ) பெருந்தலைச்சாத்தன்

### பகுதி - II பிரிவு – 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 2 = 6

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
16. வசனம், கவிதை வேறுபாடு தருக.
17. சினத்தை ஏன் காக்க வேண்டும்?
18. அறிவுடை வேந்தனின் நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?

### பிரிவு – 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 2 = 4

19. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு எழுதுக.
20. பின்னணி இசை, படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.
21. பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

### பிரிவு – 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7x2=14

22. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக. அ) வானமெல்லாம் ஆ) பூம்பாவாய்
23. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக. அ) விளங்கி ஆ) பகைத்த
24. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க
அ) முன் ஆ) கொண்டு
25. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. கலை, களை, கழை
26. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.
27. தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

அ) முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான் ஆ) பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்

28. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. வெங்காயம்

29. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.

30. கலைச் சொல்லாக்கம் தருக.

அ) Passport ஆ) Debit Card

## பகுதி- III பிரிவு – 1

<u>ஏவையேனும் இரண்டனுக்கு விடை தருக.</u> 2 x 4 = 8

31. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

32. எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது? – குறள் வழி விளக்குக.

33. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

34. எங்கிருந்தோ வருகிறது
வண்ணத்துப்பூச்சியொன்று
பறவைகளும் வரக்கூடும் நாளை - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

## பிரிவு –2

<u>ஏவையேனும் இரண்டனுக்கு விடை தருக.</u> 2 x 4 = 8

35. சஙகப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

36. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

37. வேளாண் மேலாண்மை குறித்து நீவீர் பரிந்துரைப்பவற்றை எழுதுக.

38. மயிலை சீனி.வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

## பிரிவு – 3

<u>ஏவையேனும் மூன்றனுக்கு வீடை தருக.</u> 3 x 4 = 12

39. அ) ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)

ஆ) அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணிணை விளக்குக

40. இலக்கிய நயம் பாராட்டுக.
(மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

பூமிச்சருகாம் பாலையை
முத்துபூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே – கோடிப்
புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை –செலுத்தி
இரவலரோடு பேசுவேன்!
இரவெரிக்கும் பரிதியை – ஏழை
விறகெரிக்க வீசுவேன்
– நா.காமராசன்

41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

அ) எறும்பு ஊரக் கல்லும் தேயும் (அல்லது)

ஆ) ஊழி பெயரினும் தாமபெ்யரார்

42. பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)
வெண்பாவிற்கான இலக்கணம் யாது?

43. தமிழாக்கம் தருக:

**Popular as the 'cultural capital' of India, Tamil Nadu is extremely well-known for its Marvellous temples and other architectural gems. The State rose to prominence primarily because of its well-known and outstanding Tanjore paintings that flourished at the time of Chola dynasty in ancient Tanjavoor.**

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3 x 6 = 18

44. அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக. (அல்லது) ஆ) திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் - நிறுவுக.

45. அ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக. (அல்லது)

ஆ) "ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு" – நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.

46. அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க. (அல்லது)

ஆ) சங்ககால வரலாற்றை அறிந்து கொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது?

## பகுதி - V

47. <u>அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.</u> 4 + 2 = 6

அ) "தெய்வமணிமாலை" என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ள 'ஒருமையுடன்' எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'வரும்' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com